# உவமையணிகள்

பாகம் 08

கடந்த பேப்பரில் உவமையணி பற்றி ஆரம்பித்திருந்தேன். பொதுத் தன்மையின் அடிப்படையில் ஒன்றை இன்னொன்றுடன் ஒப்பிட்டுச் சொல்வது உவமையணியாகும்.

உவமையணியை மேலும் விளக்கும் வண்ணம் ‘கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்’ என்ற வரி வருகின்றன பாடலைப் பார்ப்போம். பலர் நினைப்பது போன்று இது கம்பரின் பாடல் அல்ல என்பதையும் கடந்த பேப்பரில் கூறியிருந்தேன். பாடியவர் யார் என்று தெரியாது விட்டாலும், புகழ் பெற்ற அந்தப் பாடலின் வரிகளை இப்பொழுது பார்ப்போம்.

விடம்கொண்ட மீனைப்போலும் வெந்தழல் மெழுகு போலும்

படம்கொண்ட பாந்தள் வாயிற்பற்றிய தேரை போலும்

திடம்கொண்ட இராமபாணம் செருக்களத் துற்றபோது

கடன் பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்

திடம் கொண்ட இராமபாணத்தினால் இராவணன் அடைந்த நிலையை பலவற்றுடன் ஒப்பிட்டு புலவர் அழகாக விளக்குகின்றார். விசம் உண்ட மீனைப் போலவும், நெருப்பில் சிக்கிய மெழுகு போலவும், படமெடுக்கும் பாம்பின் வாயில் சிக்கிய தேரை போலவும், கடன் பட்டவர் நெஞ்சம் போலவும் இலங்கை வேந்தனின் நிலை இருந்தது என்று புலவர் பாடுகின்றார்

இந்த உவமைகளின் மூலம் புலவர் சொல்வது அந்த நிமிடத்தில் உயிரோடு இருந்தாலும், இயங்க முடியாது, செய்வது அறியாது இலங்கை வேந்தன் கலங்கி நின்றான் என்பதைத்தான் புலவர் இத்தனை உவமைகளோடு சொல்கின்றார். ஆனால் புலவர் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு உவமானங்களிலும் வரலாற்றுச் செய்திகள் இருக்கின்றன. விசம் உண்ட மீன் பற்றியும், கடன் பட்டவர் நெஞ்சம் பற்றியும் சொல்லப்படுகின்ற சுவையான சில செய்திகளைப் பார்ப்போம். முதலில் விசம் உண்ட மீன் பற்றிப் பார்ப்போம்.

## அணிகள் அறிவோம்

எழுதுபவர்: **வி. சபேசன்**

மீன் பிடிப்பதற்கு பல வழிகள் உண்டு. வலை வீசியும் தூண்டில் போட்டும் மீன்கள் பொதுவாகப் பிடிக்கப்படுகின்றன. வலையை நீரினில் குறுக்காக போட்டும் மீன் பிடிப்பார்கள். அத்துடன் குறைந்த வலுவுள்ள வெடி குண்டுகளை பாவிப்பவர்களும் உண்டு. குண்டு வெடித்த அதிர்ச்சியில் இறந்த மீன்கள் சற்று நேரத்தில் மேலே மிதக்கும். அவைகளை பிடித்துக் கொண்டு வருவார்கள். உடனடித் தேவைக்கு ஈட்டியால் குத்தி மீன் பிடிப்பவர்களும் உண்டு.

இவைகளை விட இன்னும் ஒரு வழி உண்டு. ஒரு வகையான விசத்தை தண்ணீரில் கலந்து மீன் பிடிக்கும் வழிமுறை உலகின் சில நாடுகளில் பின்பற்றப்படுகின்றது. பொதுவாக குளங்களில் மீன் பிடிக்கின்ற போதே இந்த முறை பின்பற்றப்படுகின்றது.

‘வச்சநாவி’ என்று அழைக்கப்படும் அந்த விசம் உடலில் கலந்தால், உடல் செயலற்றுப் போகும். உணர்வு அப்படியே இருக்கும். சிந்திக்க முடியும். உயிர் இருக்கும். ஆனால் உடலில் எந்த ஒரு அசைவும் இருக்காது. தசைகளை இயக்க முடியாது. இந்த விசத்தை நீரில் கலந்தால், மீன்களால் அசைய முடியாது போகும். அடுத்த நாள் உயிரோடு இருந்தாலும், நீரின் மேலே மீன்கள் மிதக்கும். அவற்றை மீனவர்கள் வந்து பிடித்துச் செல்வார்கள்.

இந்த வழிமுறை தற்பொழுது வெகு குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றது. அதுவும் தமிழர் வாழும் நாடுகளில் இந்த முறை இல்லை. ஆனால் இந்தப் பாடலின் மூலம் விசம் போட்டு மீனைப் பிடிக்கும் நடைமுறை ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் இருந்திருக்கிறது என்பது தெரியவருகிறது. இராவணனின் நிலையையும் புலவர் அப்படித்தான் சொல்கின்றார். இராவணனிடம் உயிர் இருந்தது. ஆனால் செயலற்றுப் போய் விடம் கொண்ட மீனைப் போல் நின்றான் என்கின்றார்.

> **யாராவது கடன் பெற்று விட்டு, அதை திருப்பிக் கொடுக்காது விட்டால், கடன் வழங்கியவர் கடன் வாங்கியவரைச் சுற்றி ஒரு வட்டம் போட்டு விடுவார். கடன் வாங்கியவர் அந்தக் கடனை திருப்பிக் கொடுக்கும் வரை அந்த வட்டத்தை விட்டு நகர முடியாது**

‘கடன் பட்டார் நெஞ்சம் போல்’ என்பதிலும் புலவர் அதையே சொல்கிறார். இங்கும் ஒரு செய்தி இருக்கின்றது. பல நாடுகளுக்கு பயணம் செய்த 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மார்க்கோ போலோ பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். மார்க்கோ போலோவின் செய்திக் குறிப்பில் தமிழகத்தில் இருந்த ஒரு வழமை பற்றி எழுதியிருக்கிறார். யாராவது கடன் பெற்று விட்டு, அதை திருப்பிக் கொடுக்காது விட்டால், கடன் வழங்கியவர் கடன் வாங்கியவரைச் சுற்றி ஒரு வட்டம் போட்டு விடுவார். கடன் வாங்கியவர் அந்தக் கடனை திருப்பிக் கொடுக்கும் வரை அந்த வட்டத்தை விட்டு நகர முடியாது.

மார்க்கோ போலோ தமிழ் நாட்டில் நின்ற பொழுது நடந்த சம்பவம் ஒன்றை குறிப்பிட்டிருக்கின்றார். மதுரையை ஆண்ட மன்னனாகிய ‘செந்தர்பந்தி’ அந்நிய வணிகன் ஒருவனிடம் கடன் வாங்கி விட்டு திருப்பிச் செலுத்தவில்லை. ‘சுந்தர பாண்டி’ என்பதையே ‘செந்தர் பந்தி’ என்று மார்க்கோ போலோ குறிப்பிடுகின்றார் என்று வரலாற்றறிஞர்கள் சொல்வார்கள்.

ஒரு நாள் சுந்தர பாண்டியன் குதிரையில் சென்று கொண்டிருந்த பொழுது கடன் கொடுத்த வணிகன் விறுவிறுவென்று மன்னனை சுற்றி ஒரு வட்டத்தை கீறி விடுகின்றான். மன்னனும் அதற்கு கட்டுப்பட்டு வட்டத்திற்குள்ளேயே நின்றான். பணியாட்களின் மூலம் பணத்தை எடுத்து வரச் சொல்லி கடனை அடைத்த பிறகே சுந்தர பாண்டியன் அந்த வட்டத்தை விட்டு வெளியே வந்தான்.

இப்படி மன்னன் கூட கட்டுப்படும் அளவிற்கு மிக இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்ட வழமை அது. இப்பொழுது வட்டத்திற்குள் நிற்கும் கடன் பட்ட ஒருவரின் நிலையை சிந்தித்துப் பாருங்கள். ஒன்றுமே செய்ய முடியாது. அசைய முடியாது வட்டத்திற்குள்ளேயே நிற்க வேண்டியதுதான்.

இப்படி செயலற்றுப் போய் நின்றான் இலங்கை வேந்தன் என்பதைத்தான் புலவர் ‘கடன் பட்டார் நெஞ்சம் போல்’ என்று பாடுகின்றார். விடம் கொண்ட மீனாக இருக்கட்டும், செந்தழல் மெழுகாக இருக்கட்டும், பாம்பின் வாயில் சிக்கிய தேரையாக இருக்கட்டும், வட்டத்திற்குள் மாட்டிய கடன் பட்டவராக இருக்கட்டும், அந்த நேரத்தில் உயிரோடு இருந்தாலும் ஒன்றுமே செய்ய முடியாது.

பல செய்திகளையும் உள்ளடக்கி மிக அழகான உவமையணிகளோடு இந்தப் பாடலை புலவர் எமக்குத் தந்திருக்கிறார். வரலாற்றுச் செய்திகளை சொல்கின்ற இந்தப் பாடலைத் தந்தவரின் வரலாறு தெரியவில்லை என்பதுதான் வேதனை. மேலும் பல செய்திகளோடும், மற்றைய பொருளணி வகைகளோடும் அடுத்த பேப்பரில் சந்திப்போம்.

**ELC Solicitors** Understanding your needs…

**சட்டத்தரணிகளின் அடிப்படைத் தகைமைகள் என்ன?**

- வாடிக்கையாளர்களின் நலனில் முதற் கவனம்.
- பல மொழிகளில் தேர்ச்சி.
- எப்போதும், எவரிடத்தும் பாரபட்சம் பாராத நேர்மை.
- தகுதி, திறமை, மதிப்புமிக்க உயர்தரம்.
- வெற்றி ஒன்றைத் தவிர வேறொன்றும் அறியாதவர்கள்.

இத்தனைத் தகைமைகளும் கொண்ட சட்டத்தரணிகள் இருக்கும் ஒரு நிறுவனம்.

**Don't just take our word for it ...**

"…This is to say a big thank you for your fast and professional way of dealing with my case. I think the service was excellent - I will definitely use you in the future and recommend the company to family & friends."

*- Karen Sommers*

As a well established firm whose reputation precedes us, superior client care is at the heart of our philosophy.

Our highly skilled, multi-lingual team provide honest and impartial advice, seeking always to act in your best interests.

We are Law Society Lexcel accredited, an honour bestowed on only 4% of law firms nationwide.

அனைத்து விதமான immigration பிரச்சனைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**SPECIALISTS IN:**

- Residential Conveyancing
- Re-mortgages
- Commercial Conveyancing
- Family Law
- Debt Recovery
- Civil Litigat ion
- Immigration

**COMPETITIVE PRICES - EXPERT ADVICE - QUALITY SERVICE**

**CALL US TODAY!**

**0800 027 8977**

ELC Solicitors

Understanding your needs…

St James House
105-11 3 The Broadway
West Ealing, London W13 9BE

www.elcsolicitors.com